முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 60 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

### புள்ளி வழங்கும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

# க.பொ.த (சாத.தர)ப் பரீட்சை - 2018
# 60 - வணிகக்கல்வியும் கணக்கீடும்

வினாப்பத்திரம் I - 1 x 40 = 40 புள்ளிகள்

வினாப்பத்திரம் II

வினா இலக்கம் 01 கட்டாயமானது = 20 புள்ளிகள்

### பகுதி I வணிகக்கல்வி

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 2 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 3 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 4 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 08 புள்ளிகள்) = 16 புள்ளிகள்

### பகுதி II கணக்கீடு

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 5 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 6 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 7 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 12 புள்ளிகள்) = 24 புள்ளிகள்

மொத்தம் = 60 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - | 60 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | - | 100 |

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................... ✓ △ 4/5
...............................................................
...............................................................

(ii) ............................................................... ✓ △ 3/5
...............................................................
...............................................................

(iii) ............................................................... ✓ △ 3/5
...............................................................
...............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

ooo

# 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
## புள்ளி வழங்கும் விதம்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | = | 40 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

| | | |
|---|---|---|
| 1ம் வினா | = | 20 புள்ளிகள் |
| பகுதி I - 2 x 08 | = | 16 புள்ளிகள் |
| பகுதி II 2 x12 | = | 24 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | = | 100 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

1ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02
V புள்ளிகள் - 02
VI புள்ளிகள் - 02
VII புள்ளிகள் - 02
VIII புள்ளிகள் - 02
IX புள்ளிகள் - 02
X புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 20

பகுதி – I

2ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 08

3ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 8

4ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 08**

## பகுதி II
## கணக்கீடு

5ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 04
IV புள்ளிகள் - 04

மொத்தப் புள்ளிகள் 12

6ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 04
IV புள்ளிகள் - 04

மொத்தப் புள்ளிகள் 12

7ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 08

மொத்தப் புள்ளிகள் 12

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

60 T I,II

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2018

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

12. 12. 2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தற்போது ரவீந்திரா கம்பனியில் வேலை செய்யும் சம்பவி என்பவர் 'அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற எண்ணக்கருவின்படி புதிய ஆய்வுகூடமும் கட்டடங்களும் அபிவிருத்தி செய்யப்பட்ட நெலுக்குளம் மகா வித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர் தரத்தின் சிறந்த சாதனையாளராகக் காணப்படுவதுடன், அவர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து கடிதத்தையும் பெற்றுள்ளார்.

**1.** இச்சம்பவத்தில் நெலுக்குளம் மகா வித்தியாலயத்தின் மூலம் திருப்தி செய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை எது?
(1) சுகாதாரம் (2) இருப்பிடம் (3) பாதுகாப்பு (4) கல்வி

**2.** இச்சம்பவத்தில் காணப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது எவ்வகை வணிக அமைப்பைச் சார்ந்ததாகும்?
(1) அரச கூட்டுதாபனங்கள்
(2) அரச திணைக்களங்கள்
(3) அரச கம்பனிகள்
(4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

**3.** மேலே தரப்பட்ட சம்பவம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) 'அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற எண்ணக்கருவானது ஒரு பொருளாதாரச் சூழல் காரணியாகும்.
(2) பாடசாலைக் கட்டடங்கள், காணி என்ற உற்பத்திக் காரணிக்குரியதாகும்.
(3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது சேவை வழங்கும் வணிகமொன்றாகும்.
(4) நெலுக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் அப்பாடசாலையின் ஒரு புறச்சூழல் காரணியாகும்.

**4.** மேலே தரப்பட்ட சம்பவத்தில் தொடர்பாடலுடன் தொடர்புபட்ட வகையில் அனுப்புபவர், செய்தி, ஊடகம், மற்றும் பெறுபவர் ஆகியவற்றைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை;

(1) சம்பவி → சம்பவி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் → எழுத்து வடிவிலானது → பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(2) சம்பவி → எழுத்து வடிவிலானது → சம்பவி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் → பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு → சம்பவி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் → எழுத்து வடிவிலானது → சம்பவி

(4) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு → எழுத்து வடிவிலானது → சம்பவி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் → சம்பவி

**5.** மேலே தரப்பட்ட சம்பவத்தில் ரவீந்திரா கம்பனி தொடர்பில் சரியான கூற்று:

(1) வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்வது கட்டாயமானதாகும்.
(2) இவ்வணிகம் சட்ட ஆளுமையுடையதாகும்.
(3) வணிக உடைமையாளரது நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.
(4) இவ்வணிகம் ஒரு பொதுத்துறை வணிகமாகும்.

**6.** விவசாயி ஒருவரால் வெற்றிகரமாக நடாத்தப்படும் வணிகமொன்று தொடர்பில் வெள்ளத்தின் மூலம் ஏற்படக்கூடிய இழப்பைக் கொண்டிருக்கும் உற்பத்திக் காரணி

(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

**7.** இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் அமெரிக்க டொலரின் பெறுமதியானது அதிகரித்துச் செல்லுதலானது ஆடை ஏற்றுமதிக் கம்பனிக்கான ஒரு

(1) புறச்சூழல் காரணியாகும். (2) பொருளாதாரச் சூழல் காரணியாகும்.
(3) சட்டச் சூழல் காரணியாகும். (4) தொழில்நுட்பச் சூழல் காரணியாகும்.

● பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி **8, 9** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைக் கொண்டிருக்கும் சுபாஸ் நிசா என்பவர் தனது வாடிக்கையாளரான தீபக் திவாகர் என்பவருக்கு ரூ. 100 000 இற்கு காசோலை ஒன்றை வழங்கியிருந்தார். தீபக் திவாகர் அதனை வங்கிக் கருமபீடத்தில் சமர்பித்து பணமாக மாற்றிக்கொண்டார்.

**8.** காசோலை தொடர்பில் பணம் வழங்குபவரையும் (Drawee) பணம் பெறுபவரையும் (payee) முறையே எடுத்துக்காட்டும் விடை,

(1) இலங்கை வங்கி, தீபக் திவாகர் (2) தீபக் திவாகர், இலங்கை வங்கி
(3) இலங்கை வங்கி, சுபாஸ் நிசா (4) சுபாஸ் நிசா, தீபக் திவாகர்

**9.** மேலே தரப்பட்ட சம்பவத்தில் வழங்கப்பட்ட காசோலையானது,


(1) பொதுமுறைக் குறுக்குக் கோடிடப்பட்டதாகும்.
(2) சிறப்புமுறைக் குறுக்குக் கோடிடப்பட்டதாகும்.
(3) குறுக்குக் கோடிடப்படாததாகும்.
(4) வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்ய முடியாததாகும்.


**10.** காப்புறுதி சம்பந்தமாக முதலாம் தரப்பினர் ............①............ என அழைக்கப்படும் அதேவேளை இரண்டாம் தரப்பினர் ............②............ என அழைக்கப்படுவர்.

மேலே தரப்பட்ட கூற்றில் முறையே ① மற்றும் ② ஆகியவற்றுக்கு வரவேண்டிய பொருத்தமான சொற்களை எடுத்துக்காட்டும் விடை:


(1) காப்புறுதியளிப்போர், காப்புறுதி செய்வோர் (2) காப்புறுதி செய்வோர், காப்புறுதியளிப்போர்
(3) காப்புறுதிக் கம்பனி, காப்புறுதி செய்வோர் (4) காப்புறுதியளிப்போர், காப்புறுதிக் கம்பனி

**11.** பின்வரும் உருவப்படங்களில் இலத்திரனியலல்லாத சைகைத் தொடர்பாடல் முறை:


(1)


(2)


(3)


(4)

**12.** போக்குவரத்து தொடர்பிலான பல்வேறு நிகழ்வுகள் மற்றும் போக்குவரத்து அடிப்படை மூலகங்கள் என்பன முறையே **X** மற்றும் **Y** ஆகிய நிரல்களில் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. இலங்கைத் தீவு பூராகவும் 1990 அம்புலன்ஸ் சேவையானது விஸ்தரிக்கப்படல் | A – வழி |
| 2. வடக்கு அதிவேகப் பாதையின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படல் | B – ஊடகம் |
| 3. கொழும்பு கோட்டை மத்திய பேருந்து நிலையம் புதுப்பிக்கப்படல் | C – வலு |
| 4. உலக சந்தையில் காணப்படும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விலையின் அடிப்படையில் எண்ணெய் விலையைச் சீராக்குதல் | D – தரிப்பிடம் |

மேலே **X** நிரலில் தரப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் **Y** நிரலிலுள்ள போக்குவரத்து அடிப்படை மூலகங்கள் பொருந்தக்கூடியவாறு சரியான ஒழுங்குமுறையில் காணப்படும் விடை:

(1) A, B, D, C (2) B, A, C, D (3) B, A, D, C (4) B, C, A, D

● பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி **13, 14** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

வெளியீட்டாளர் ஒருவர் கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சிச் சந்தையின் பிரதான நுழைவாயிலின் பின்புறமாக தனது கண்காட்சிக்கூடத்தை ஒதுக்கீடு செய்வதற்குத் தீர்மானித்திருந்ததுடன் அதற்காக ஊழியர் ஒருவரையும் ஆட்சேர்ப்புச் செய்தார்.

**13.** இச்சம்பவத்தில் காணப்படும் இரண்டு முகாமைத்துவக் கருமங்கள்

(1) திட்டமிடல், நெறிப்படுத்தல் (2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல்
(3) ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல் (4) நெறிப்படுத்தல், ஒழுங்கமைத்தல்

**14.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் இரண்டுமாவன:

(1) மேம்படுத்தல், உற்பத்திப்பொருள் (2) மேம்படுத்தல், இடம்
(3) உற்பத்திப்பொருள், இடம் (4) உற்பத்திப்பொருள், விலை

**15.** திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் **தவறான** கூற்று

(1) முதனிலை விநியோகத்தர்களிடமிருந்து முதலீட்டாளர் ஒருவர் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யமுடியும்.
(2) திறைசேரி உண்டியல்கள், இடரில்லாத ஒரு முதலீடாகும்.
(3) திறைசேரி உண்டியல்கள் அரசாங்கத்தின் நீண்டகால நிதித் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
(4) திறைசேரி உண்டியல்கள் முழுமையான அரசாங்கப் பாதுகாப்பைக் கொண்டவையாகும்.

**16.** முதலீட்டாளர் ஒருவர் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதிலும் பார்க்க சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் உயர்வான திரும்பலை எதிர்பார்க்கின்றார். இதற்குக் காரணம்

(1) சாதாரண பங்குகளுக்கான குறைவான இடர்
(2) சாதாரண பங்குகளுக்கான உயர்வான இடர்
(3) சாதாரண பங்குகளுக்கான உயர்வான வட்டி வருமானம்
(4) சாதாரண பங்குகளுக்கான உயர்வான அரசாங்கப் பாதுகாப்பு

**17.** அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைச் சரியாக எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) சொத்துக்கள் + பொறுப்புக்கள் = உரிமையாண்மை
(2) சொத்துக்கள் – பொறுப்புக்கள் = உரிமையாண்மை
(3) சொத்துக்கள் + உரிமையாண்மை = பொறுப்புக்கள்
(4) உரிமையாண்மை – பொறுப்புக்கள் = சொத்துக்கள்

**18.** வணிகம் ஒன்றில் ஊழியர்களுக்கான சம்பளம் ரூ. 8 000 ஐச் செலுத்துவதன் மூலம்,

(1) சொத்துக்கள் ரூ. 8 000 ஆல் குறைவடைவதுடன் உரிமையாண்மை ரூ. 8 000 ஆல் குறைவடையும்.
(2) சொத்துக்கள் ரூ. 8 000 ஆல் குறைவடைவதுடன் உரிமையாண்மை ரூ. 8 000 ஆல் அதிகரிக்கும்.
(3) சொத்துக்கள் ரூ. 8 000 ஆல் அதிகரிப்பதுடன் பொறுப்புக்கள் ரூ. 8 000 ஆல் அதிகரிக்கும்.
(4) உரிமையாண்மை ரூ. 8 000 ஆல் குறைவடைவதுடன் பொறுப்புக்கள் ரூ. 8 000 ஆல் அதிகரிக்கும்.

**19.** கஜன் வணிகத்தின் உரிமையாண்மை 01.01.2018 இல் ரூ. 150 000 ஆகக் காணப்பட்ட அதேவேளை, 31.01.2018இல் உரிமையாண்மை ரூ. 170 000 ஆகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் ஒரு கொடுக்கல் வாங்கல் மட்டுமே இடம்பெற்றிருந்தால், அக்கொடுக்கல்வாங்கலானது,
(1) ஈடுபடுத்திய மூலதனம் ரூ. 170 000
(2) உடைமையாளரால் அவரது தனிப்பட்ட பாவனைக்காக ரூ. 20 000 பெறுமதியான பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை
(3) ரூ. 60 000 கிரயமான ஒரு தொகைப் பொருட்கள் ரூ. 40 000 இற்குக் கடனிற்கு விற்கப்பட்டமை
(4) ரூ. 40 000 கிரயமான ஒரு தொகைப் பொருட்கள் ரூ. 60 000 இற்குக் காசுக்கு விற்கப்பட்டமை

**20.** வணிகமொன்றில் இடம்பெற்ற ஒரு கொடுக்கல்வாங்கலும் அதனைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட பூரணமற்ற இரட்டைப்பதிவும் கீழே தரப்படுகின்றது.

• ரூ. 25 000 மீதியாகக் காணப்பட்ட கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 22 000 ஐ பெற்றுக்கொண்டதன் மூலம் கணக்குத் தீர்க்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| காசுக் கணக்கு வரவு | | 22 000 |
| ① ............ கணக்கு வரவு | | ② ............ |
| கடன்பட்டோர் கணக்கு செலவு | | ③ ............ |

மேலே தரப்பட்ட ①, ②, ③ ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சொல் மற்றும் தொகைகளைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை:
(1) கொடுத்த கழிவு, ரூ. 3 000 , ரூ. 25 000 (2) பெற்ற கழிவு, ரூ. 3 000 , ரூ. 25 000
(3) கொடுத்த கழிவு, ரூ. 3 000 , ரூ. 22 000 (4) பெற்ற கழிவு, ரூ. 3 000 , ரூ. 22 000

**21.** பின்வருவனவற்றுள் இரட்டைப்பதிவுக் கோட்பாட்டுடன் சம்பந்தப்பட்ட வகையில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
இரட்டைப்பதிவுக் கோட்பாட்டின்படி,
(1) வரவு அதிகரித்தல், செலவு குறைவடைதல் பொறுப்புக் கணக்குகளுக்குப் பொருத்தமானதாகும்.
(2) வரவு அதிகரித்தல், செலவு குறைவடைதல் உரிமையாண்மைக் கணக்குகளுக்குப் பொருத்தமானதாகும்.
(3) செலவு அதிகரித்தல், வரவு குறைவடைதல் வருமானக் கணக்குகளுக்குப் பொருத்தமானதாகும்.
(4) செலவு அதிகரித்தல், வரவு குறைவடைதல் சொத்துக்கள் கணக்குகளுக்குப் பொருத்தமானதாகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **22, 23** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பின்வருவன பிரபு புத்தக வெளியீட்டாளர் நிறுவனத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

A - ரூ. 250 000 பெறுமதியான அச்சு இயந்திரம் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படல்
B - ரூ. 50 000 பெறுமதியான அச்சிடும் தாள்கள் ரூபன் என்பவரிடமிருந்து கடனிற்குக் கொள்வனவு செய்யப்படல்
C - ரூ. 100 000 பெறுமதியான தளபாடங்கள் மொறட்டுவ தளபாடங்கள் கம்பனியிடமிருந்து கடனிற்குக் கொள்வனவு செய்யப்படல்
D - ரூ. 100 000 கிரயமான புத்தகங்கள் ரூ. 160 000 இற்கு கடனுக்கு விற்கப்படல்

**22.** கொள்வனவு நாட்குறிப்பில் பதியப்பட்ட கொடுக்கல்வாங்கல்
(1) A (2) B (3) C (4) D

**23.** மேலே தரப்பட்ட A, B, C ஆகிய கொடுக்கல்வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை:
(1) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (கச்சாத்து), விற்பனைப் பட்டியல், கொள்வனவுப் பட்டியல்
(2) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, கொள்வனவுப் பட்டியல், விற்பனைப் பட்டியல்
(3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, கொள்வனவுப் பட்டியல், விற்பனைப் பட்டியல்
(4) கொள்வனவுப் பட்டியல், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, விற்பனைப் பட்டியல்

**24.** கபிலன் வணிகத்தின் 2018 ஒக்ரோபர் மாதத்திற்கான வங்கிக் கூற்றின் செலவு மீதி ரூ. 12 000 ஆகும். இது
(1) வணிகத்தின் ஒரு சொத்தாகும்.
(2) வணிகத்தின் ஒரு பொறுப்பாகும்.
(3) வங்கியின் ஒரு சொத்தாகும்.
(4) வணிகத்தின் ஒரு வங்கி மேலதிகப்பற்றாகும்.

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **25, 26** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

31.07.2018 இல் இருந்தவாறு சுந்தரம் வணிகத்தின் சில்லறைக் காசாளரிடம் இருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 2 500 ஆகும்.

பின்வருவன 2018 ஜூலை மாதத்திற்கான சில்லறைக் காசேட்டுப் பகுப்பாய்வு நிரல்களின் மீதிகள் ஆகும்.

| | |
|---|---|
| காகிதாதிகள் | ரூ. 2 500 |
| பிரயாணச்செலவுகள் | ரூ. 1 800 |
| உபசரணைச் செலவுகள் | ரூ. 2 000 |
| நானாவித செலவுகள் | ரூ. 1 200 |

01.08.2018 இல் இருந்து சில்லறைக் காசேட்டிற்கான முற்பணப் பெறுமதியை ரூ. 15 000 வரை அதிகரிக்க சுந்தரம் தீர்மானித்தார்.

**25.** இவ்வணிகத்தின் 2018 ஜூலை மாதத்திற்கான சில்லறைக் காசேட்டின் செலவுகளின் பெறுமதி
(1) ரூ. 2 500 (2) ரூ. 7 500 (3) ரூ. 10 000 (4) ரூ. 15 000

**26.** 01.08.2018 இல் இருந்தவாறான சில்லறைக் காசேட்டு மீள்நிரப்பும் தொகை
(1) ரூ. 2 500 (2) ரூ. 5 000 (3) ரூ. 12 500 (4) ரூ. 15 000

**27.** உடைமையாளரால் மேலதிகமாக இடப்பட்ட மூலதனம் ரூ. 5 000 ஐ பதிவது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணத்தையும் மூலப்பதிவேட்டையும் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை:
(1) காசேடு, பற்றுச்சீட்டு (2) பொது நாட்குறிப்பு, பற்றுச்சீட்டு
(3) பற்றுச்சீட்டு, பொது நாட்குறிப்பு (4) பற்றுச்சீட்டு, காசேடு

**28.** வணிகமொன்றில் 31.03.2018 இல் இருந்தவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் கூட்டுத்தொகை வரவு நிரல் ரூ. 800 000 ஆகவும், செலவு நிரல் ரூ. 825 000 ஆகவும் காணப்பட்டது. இவ்வித்தியாசத்திற்குக் காரணமான ஒரு கணக்கீட்டு வழு
(1) கொடுத்த கழிவுக் கணக்கின் மொத்தம் ரூ. 25 000 ஆல் அதிகரித்தல்
(2) விற்பனைக் கணக்கின் மொத்தம் ரூ. 25 000 ஆல் அதிகரித்தல்
(3) கொள்வனவுக் கணக்கின் மொத்தம் ரூ. 25 000 ஆல் அதிகரித்தல்
(4) பெற்ற கழிவுக் கணக்கின் மொத்தம் ரூ. 25 000 ஆல் குறைவடைதல்

**29.** வணிகமொன்றினால் குமணன் என்பவரிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட சரக்குகள் ரூ. 45 000 ஆனது குமணனின் கணக்கில் ரூ. 54 000 எனப் பதியப்பட்டது. இவ்வழுவைத் திருத்துவதற்கான மூலப்பதிவேடு
(1) பொது நாட்குறிப்பேடு (2) கொள்வனவு நாட்குறிப்பேடு
(3) காசேடு (4) விற்பனை நாட்குறிப்பேடு

**30.** பின்வருவனவற்றுள் சேதுகாவலர் விளையாட்டுக் கழகத்தின் வருமானச் செலவுகள் கணக்கில் **உள்ளடக்கப்படமாட்டாத** கொடுக்கல்வாங்கல்
(1) செய்திப் பத்திரிகைகளை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட ரூ. 1 000
(2) விளையாட்டு உபகரணங்களின் கொள்வனவு ரூ. 15 000
(3) பெற்றுக்கொண்ட நன்கொடை ரூ. 5 000
(4) செலுத்திய போக்குவரத்துச் செலவுகள் ரூ. 2 500

**31.** பூச்சாடிகளைத் தயாரிக்கும் வணிகமொன்றின் 2018 ஒக்ரோபர் மாதத்திற்கான மொத்த உற்பத்திக் கிரயம் ரூ. 150 000 ஆகக் காணப்பட்ட அதேவேளை இம்மாதத்தில் 500 பூச்சாடிகள் தயாரிக்கப்பட்டன. பூச்சாடி ஒன்றின் உற்பத்திக் கிரயத்தின் மீது 20% இலாப எல்லை பேணப்படின் பூச்சாடி ஒன்றின் விற்பனை விலை:
(1) ரூ. 240 (2) ரூ. 300 (3) ரூ. 360 (4) ரூ. 500

**32.** உற்பத்தி வணிகங்களது செலவு உருப்படிகள் சிலவும் உற்பத்திக் கிரய மூலகங்கள் சிலவும் முறையே **X** மற்றும் **Y** நிரல்களில் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. கூரை ஓடுகள் உற்பத்தி வணிகமொன்றின் மின்சாரச் செலவு | A – நேரில் ஊழியக் கிரயம் |
| 2. ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் ஆடை தயாரிப்பாளர்களது கூலிகள் | B – ஏனைய நேர் கிரயம் |
| 3. பாதணி உற்பத்தி வணிகமொன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர் கூலி | C – நேர் ஊழியக் கிரயம் |
| 4. புத்தக வெளியீட்டாளரின் இறைக் கட்டணம் | D – ஏனைய நேரில் கிரயம் |

மேலே தரப்பட்ட **X** நிரலிலுள்ள செலவு உருப்படிகளுடன் **Y** நிரலிலுள்ள உற்பத்திக் கிரய மூலகங்கள் பொருந்தக்கூடியவாறு சரியான ஒழுங்குமுறையில் காணப்படும் விடை
(1) B, A, C, D (2) B, C, A, D (3) D, C, A, B (4) D, C, B, A

**33.** குமுதம் என்பவர் தனது வணிகத்தின் மூலம் உழைத்த ரூ. 100 000 ஐ 01.04.2017 இல் 12% வருடாந்த வட்டி வீதத்தை வழங்கும் ஒரு நிலையான வைப்பில் முதலீடு செய்தார். 31.03.2018 இல் வருடாந்த வட்டி பெறப்பட வேண்டும்.

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட இவ்வணிகத்தின் நிதிக் கூற்றுக்களின்படி,
(1) வருமானக் கூற்றில் வட்டி வருமானம் ரூ. 12 000 ஆகும்.
(2) நிதி நிலைமைக் கூற்றில் வருமதி வட்டி வருமானம் ரூ. 12 000 ஆகும்.
(3) நிதி நிலைமைக் கூற்றில் வருமதி வட்டி வருமானம் ரூ. 9 000 ஆகும்.
(4) நிதி நிலைமைக் கூற்றில் வருமதி வட்டி வருமானம் ரூ. 3 000 ஆகும்.

**34.** வணிகமொன்று 01.01.2016 இல் இயந்திரமொன்றை ரூ. 500 000 இற்குக் கொள்வனவு செய்தது. இவ்வியந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். பயன்தரு ஆயுட்காலத்தின் இறுதியில் இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி ரூ. 50 000 ஆகும்.

31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வணிகம் தயாரித்த வருமானக் கூற்றில் காணப்படும் இயந்திரத்தின் பெறுமானத்தேய்வுத் தொகை.
(1) ரூ. 90 000 (2) ரூ. 100 000 (3) ரூ. 180 000 (4) ரூ. 320 000

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
31.12.2017 இல் இருந்தவாறு ஜெயன் ஹரிஷன் வணிகத்தின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுத்த சில மீதிகள் வருமாறு:

| | ரூபா. |
|---|---|
| மூலதனம் | 300 000 |
| சரக்கிருப்பு (01.01.2017 இல் இருந்தவாறு) | 40 000 |
| விற்பனைகள் | 250 000 |
| கொள்வனவுகள் | 150 000 |
| உட்சுமை கூலி | 3 000 |
| கடன்பட்டோர் | 35 000 |
| காப்புறுதிச் செலவுகள் | 18 000 |
| நிர்வாகச் சம்பளங்கள் | 26 000 |
| நிதிச் செலவுகள் | 4 000 |
| பெற்ற கழிவுகள் | 2 000 |
| ஏனைய வருமானங்கள் | 5 000 |
| கொடுத்த கழிவுகள் | 10 000 |

**மேலதிக தகவல்கள்:**
* 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த காப்புறுதிக் கட்டணம் ரூ. 20000 ஆகும்.
* கடன்பட்டோரில் ரூ. 3000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.
* 31.12.2017 இல் இருந்தவாறு சரக்கிருப்பின் கிரயம் ரூ. 30000 ஆகும்.

**35.** 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விற்பனைக் கிரயம்
(1) ரூ. 87 000 (2) ரூ. 120 000 (3) ரூ. 160 000 (4) ரூ. 163 000

**36.** 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வணிகத்தின் மொத்த இலாபம்
(1) ரூ. 87 000 (2) ரூ. 90 000 (3) ரூ. 130 000 (4) ரூ. 163 000

**37.** 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இவ்வணிகம் காசாகச் செலுத்திய காப்புறுதித் தொகை
(1) ரூ. 2 000 (2) ரூ. 18 000 (3) ரூ. 20 000 (4) ரூ. 22 000

**38.** 31.12.2017 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் கடன்பட்டோர் தொகை
(1) ரூ. 3 000 (2) ரூ. 32 000 (3) ரூ. 35 000 (4) ரூ. 38 000

**39.** 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இவ்வணிகத்தின் தேறிய இலாபம்
(1) ரூ. 31 000 (2) ரூ. 33 000 (3) ரூ. 36 000 (4) ரூ. 38 000

**40.** 31.12.2017 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் உடைமையாளரது மொத்த உரிமையாண்மை
(1) ரூ. 331 000 (2) ரூ. 333 000 (3) ரூ. 336 000 (4) ரூ. 338 000

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **60** විෂයය / பாடம்: **வணிகக்கல்வியும் கணக்கீடும்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 4 | 21. | 3 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 1, 2, 3, 4 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 1 | 34. | 1 |
| 05. | 1 | 15. | 3 | 25. | 2 | 35. | 4 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 3 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 2 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 1 | 39. | 1 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 2 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25 / 40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25 / 40**

# வணிகக் கல்வியும் கணக்கீடும் II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**60 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2018

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**முக்கியம் :** அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமல் வெட்டிவிடப்படும்.

* **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

மட்டக்களப்பில் வசிக்கும் ஆனந்த் ரிநுதன் என்பவர் முயற்சியாண்மைசார் முகாமைத்துவப் பட்டதாரி என்பதுடன், இவர் அப்பிரதேசத்தில் காணப்படும் பாரியளவிலான தென்னந் தோட்ட உடைமையாளர்களிடமிருந்து தேங்காய்களை அதன் மட்டையுடன் (அதன் மேல் தோலுடன்) சேர்த்துக் கொள்வனவு செய்வதன் மூலம் சுவையூட்டப்பட்ட தேங்காய், கொப்பராத் தேங்காய், தேங்காய்ச் சிரட்டை ஆகியவற்றையும் தென்னந்தும்பைப் பயன்படுத்தி அழகு சாதனப் பொருட்களையும் தயாரித்து ஏற்றுமதி செய்வது தொடர்பில் 'அபூர்வ தயாரிப்புகள்' எனும் வணிகத்தைக் கொண்டு நடாத்துகின்றார்.

பின்வருவன 01 ஒக்ரோபர் 2018இல் இருந்தவாறு 'அபூர்வ தயாரிப்புகள்' வணிகத்தின் கணக்குகளின் மீதிகள் ஆகும்.

| | ரூபா |
|---|---|
| • காசு மீதி | 12 000 |
| • கடன்பட்டோர் | 18 000 |
| • கடன் கொடுத்தோர் | 50 000 |
| • உபகரணங்கள் | 250 000 |
| • காணியும் கட்டடமும் | 100 000 |

பின்வருவன 31ஒக்ரோபர் 2018 இல் முடிவடைந்த மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

| | ரூபா |
|---|---|
| • காசுக் கொள்வனவுகள் (தேங்காய் மட்டையுடன்) | 200 000 |
| • கடன் கொள்வனவு (தேங்காய் மட்டையுடன்) | 100 000 |
| • கடன் விற்பனைகள் | 200 000 |
| • காசு விற்பனைகள் | 400 000 |
| • உற்பத்தி ஊழியர்களுக்குச் செலுத்திய கூலிகள் | 70 000 |
| • உற்பத்திப்பொருட்களைக் கொண்டு செல்வதற்காகச் செலுத்திய செலவுகள் | 60 000 |
| • செலுத்திய உட்சுமைகூலிகள் | 20 000 |
| • செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணங்கள் | 6 000 |

பாரியளவிலான தென்னந்தோட்டங்களைச் சிறிய சிறிய துண்டுகளாகப் பிரித்தமை மற்றும் தேங்காய்களைத் தாக்கும் பூச்சிகளின் தொந்தரவு போன்றவற்றின் விளைவாக தேங்காய் வழங்கலில் ஏற்பட்ட குறைவு காரணமாக ஆனந்த் ரிநுதன் தேங்காய்களைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட விரயங்களைக் குறைத்து எதுவித சுவையூட்டிகளும் இல்லாத தேங்காய்ப்பால் மா தயாரிப்பை அறிமுகப்படுத்தினார்.

ஆனந்த் ரிநுதன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட கண்காட்சியில் தான் சந்தித்த வெளிநாட்டுக் கொள்வனவாளருக்குத் தனது தயாரிப்புகள் பற்றி எடுத்துக்கூறி அறிமுகம் செய்ததன் விளைவாக இலத்திரனியல் தபால் மூலம் 10 000 பால்மா பொதிகளுக்கான கட்டளையைப் பெற்றுக்கொண்டார். 31 டிசம்பர் 2018 இற்கு முன்னர் இக்கட்டளையானது கப்பலேற்றுகை செய்யப்படுமென தொலைபேசி ஊடாக ஆனந்த் ரிநுதன் அவருக்கு அறிவித்திருந்தார்.

ஆனந்த் ரிநுதன் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தனது பால்மாத் தயாரிப்புக்களை விரிவுப்படுத்த முடியாதிருந்ததால் 31.10.2018இல் ரூ. 500 000 ஐக் கடனாகப் பெற வங்கிக்கு விண்ணப்பித்திருந்தார். தேங்காய்களையும் ஏனைய உற்பத்திப்பொருட்களையும் கொண்டு செல்வதற்காக அமரன் மோட்டர்ஸ் நிறுவனத்திலிருந்து ரூ. 300 000 பெறுமதியான லொறி கடனிற்குக் கொள்வனவு செய்யப்பட்டது. உபகரணங்கள் வருடாந்தம் 12% பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியதுடன் 31.10.2018 இல் எதுவித சரக்கிருப்புகளும் காணப்படவில்லை.

(i) (a) 'அபூர்வ தயாரிப்புகள்' வணிகமானது எந்த நிறுவன வகையைச் சார்ந்ததாகும்?

(b) இந்த வணிகத்தின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட மட்டையுடனான தேங்காய்களை உற்பத்தி செய்வதற்கான உற்பத்திக் காரணி எது?

(ii) இச்சம்பவத்திலிருந்து அபூர்வ தயாரிப்புகள் வணிகத்திற்கான பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் ஆகிய ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.

(iii) (a) பின்வரும் கூற்றுக்களில் காணப்படும் சந்தைப்படுத்தல் கலவையின் மாறி எது?

1. பால்மாப் பொதிகளைத் தயாரித்தல்
2. ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக் கண்காட்சியின்போது பால்மாப் பொதிகள் பற்றி எடுத்துக்கூறி அறிமுகம் செய்தல்

(b) பின்வரும் கூற்றுகளில் காணப்படும் முகாமைத்துவக் கருமம் எது?

1. 31.12.2018 இற்கு முன்னதாக பால்மாப் பொதிகளைக் கப்பலேற்றுவதாகத் தீர்மானித்தல்
2. சிறிய லொறி ஒன்றைக் கடனிற்கு வாங்குதல்

(iv) 'அபூர்வ தயாரிப்புகள்' வணிகத்தினால் பயன்படுத்தப்பட்ட இரண்டு துணைச் சேவைகளையும் அவ்வொவ்வொரு துணைச் சேவையையும் பயன்படுத்தியதை நியாயப்படுத்துவதற்கு இச்சம்பவத்தில் இருந்து இரண்டு உதாரணங்களையும் தருக. (உமது விடையைத் தருவதற்குக் கீழே தரப்படும் அட்டவணையின் மாதிரியைப் பயன்படுத்துக.)

| துணைச் சேவை | உதாரணம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(v) 01.10.2018 இல் இருந்தவாறு 'அபூர்வ தயாரிப்புக்கள்' வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு?

(vi) (a) அபூர்வ தயாரிப்புகள் வணிகத்தின் நேர்க் கிரயமொன்றையும் நேரில் கிரயமொன்றையும் அவற்றிற்கான பெறுமதிகளுடன் தருக.

(b) அபூர்வ தயாரிப்புகள் வணிகத்தின் பொறுப்புக்களில் அதிகரிப்பை ஏற்படுத்துவதில் தாக்கம் செலுத்தும் கொடுக்கல்வாங்கல் ஒன்று தருக.

(vii) 2018 அக்ரோபர் மாதத்திற்கான அபூர்வ தயாரிப்புகள் வணிகத்தின் பொது நாட்குறிப்பேட்டைத் தயாரிக்குக.

(viii) (a) 31.10.2018 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் காசு மீதி எவ்வளவு?

(b) 31.10.2018 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் நடைமுறைச் சொத்தொன்றையும் நடைமுறைப் பொறுப்பொன்றையும் பெறுமதியுடன் தருக.

(ix) 2018 அக்ரோபர் மாதத்திற்கான அபூர்வ தயாரிப்புகள் வணிகத்தின் தேறிய இலாபத்தைக் கணிக்குக.

(x) (a) அபூர்வ தயாரிப்புகள் வணிகத்தின் உரிமையாண்மைக் கணக்கு, வருமானக் கணக்கு ஆகிய ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.

(b) 31.10.2018 இல் இருந்தவாறு அபூர்வ தயாரிப்புகள் வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி எவ்வளவு?

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

1. i. a. **தனியார் துறை / தனியாள் உடைமை வியாபாரம் / தனியுடைமை / தனி வியாபாரம்**
**இலாப நோக்கமுள்ள வியாபாரம் / சிற்றளவு நடுத்தர வியாபாரம்** **(01 புள்ளி)**

b. **மூலதனம்** **(01 புள்ளி)**

ii. பலம் - ஆனந் ரினுதன் முயற்சியாண்மைசார் முகாமைத்துவப் பட்டதாரி

பலவீனம் - நிதிப்பற்றாக்குறை

வாய்ப்பு - அவர் வசிக்கும் பிரதேசத்தில் தென்னந்தோட்டங்கள் உள்ளன.
ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட கண்காட்சி

அச்சுறுத்தல் - பாரியளவான தென்னந்தோட்டங்களை சிறிய சிறிய துண்டுகளாகப் பிரித்தமை.
பூச்சிகளின் தாக்கம்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

iii. a. 1. உற்பத்திப் பொருள்
2. இடம் / மேம்படுத்தல் (1/2 × 2 = 01 புள்ளிகள்)

b. 1. திட்டமிடல்
2. ஒழுங்கமைத்தல் (1/2 × 2 = 01 புள்ளிகள்)

iv.

| துணைச்சேவவை | உதாரணம் |
|---|---|
| 1. போக்குவரத்துச் சேவை | - கப்பலேற்றுவதற்கு அறிவித்தமை.<br>- லொறி கடனுக்கு கொள்வனவு செய்யப் பட்டது.<br>- உட்சுமைக்கூலி செலுத்தியமை<br>- போக்குவரத்துச்செலவு வழங்கப்பட்டமை |
| 2. வங்கிச் சேவை | - வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்திருந்தமை |
| 3. தொடர்பாடல் சேவை | - இலத்திரனியல்தபால்பயன்படுத்தபட்டமை.<br>- தொலைபேசிப் பயன்படுத்தியமை. |

(1/2 x 2 = 1 புள்ளி) (1/2 x 2 = 1 புள்ளி)

v. ரூபா 330 000 (2 புள்ளி)

**அல்லது**

(12000 + 18000 + 250 000 + 100 000) - 50 000 = 330 000
(1/2 புள்ளி) (1/2 புள்ளி)

**அல்லது**

(380 000 - 50 000) = 330 000
(1/2) (1/2)

vi. a. **நேர்க்கிரயம்**

- மட்டையுடனான தேங்காய் காசுக் கொள்வனவு - ரூபா 200 000
- மட்டையுடனான தேங்காய் கடனுக்குக் கொள்வனவு - ரூபா 100 000
- உற்பத்தி ஊழியர்கூலி - ரூபா 70 000
- உட்சுமைக்கூலி - ரூபா 20 000

ஏதாவது ஒரு உருப்படிக்கு 1/2 புள்ளி (1 × 1/2 = 1/2 புள்ளி)

**நேரில் கிரயம்**

- மின்சாரக் கட்டணம் - ரூபா 6 000
- உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்லல் கூலி - ரூபா 60 000
- உபகரணப் பெறுமானத் தேய்வு - ரூபா 2 500

ஏதாவது ஒரு உருப்படிக்கு 1/2 புள்ளி (1 × 1/2 = 1/2 புள்ளி)

b. - அமரன் மோட்டர்ஸ் நிறுவனத்திலிருந்து ரூபா 300 000 பெறுமதியான லொறி கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
- மட்டையுடனான தேங்காய் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது ரூபா 100 000
- அட்டுறு மின்சாரக் கட்டணம் ரூபா 6000 (1 × 1 = 01 புள்ளி)

vii. **பொதுநாட்குறிப்பு**

| திகதி | பொ. நா. கை. இ | விபரம் | பே. ப | வரவு ரூபா | செலவு ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. 01.10.18 | 1. | காசு கணக்கு வரவு | 1. | 12 000 | |
| | | கடன்பட்டோர் கணக்கு வரவு | | 18 000 | |
| | | உபகரணங்கள் கணக்கு வரவு | | 250 000 | |
| | | காணி கட்டிடக் கணக்கு வரவு | | 100 000 | |
| | | கடன் கொடுத்தோன் கணக்கு | | | 50 000 |
| | | மூலதனக் கணக்கு | | | 330 000 |
| | | (2018.10.01 இல் ஆரம்பச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பதியப்பட்டது.) | | 380 000 | 380 000 |
| 2. 31.10.18 | | மின்சாரக் கணக்கு வரவு | | 6 000 | |
| | | செலுத்த வேண்டிய மின்சாரம் கணக்கு | | | 6 000 |
| | | (செலுத்த வேண்டிய மின்சார கட்டணம் 6000 ரூபா ஏடுகளில் பதியப்பட்டது.) | | | |
| 3. 31.10.18 | | லொறிக்கணக்கு வரவு | | 300 000 | |
| | | அமரன் மோட்டார்ஸ் நிறுவனக் கணக்கு | | | 300 000 |
| | | (அமரன் மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து 300 000 பெறுமதியான லொறி கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது பதியப்பட்டது) | | | |
| 4. 31.1018 | | உபகரண பெறுமானத் தேய்வு கணக்கு வரவு | | 2 500 | |
| | | உபகரணப் பெறுமான தேய்வு ஏற்பாட்டுக் க/கு | | | 2 500 |
| | | (உபகரணப் பெறுமானத் தேய்வு 2500 ரூபா ஏடுகளில் பதியப்பட்டது.) | | | |

(2 × 1 = 2 புள்ளிகள்)

viii.a. 62 000/= (01 புள்ளி)

**அல்லது**

**காசுப்புத்தகம்**

| திகதி | ப.சீ. இல | விபரம் | பே. பக் | ரூபா | திகதி | கை. இல | விபரம் | பே. பக் | ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18.10.01 | | ஆரம்ப மீதி | (1/2) | 12 000 | 18.10.31 | | கொள்வனவு | | 200 000 |
| 18.10.31 | | விற்பனை | | 400 000 | 18.10.31 | | ஊழியர் கூலி | | 70 000 |
| | | | | | 18.10.31 | | உற்பத்திப் பொருள் கொண்டு செல்லும் கூலி | | 60 000 |
| | | | | | 18.10.31 | | | | |
| | | | | | 18.10.31 | | உட்சுமைக் கூலி | | 20 000 |
| | | | | | 18.10.31 | | மீ / செ | | 62 000 |
| | | | | 412 000 | | | | | 412 000 |
| 18.11.01 | | மீ.கீ.கொ.வ | | 62 000 | | | | | |

b. **நடைமுறைச் சொத்து**

கடன்பட்டோர் ரூபா 218 000

காசு மீதி ரூபா 62 000 (1 × 1/2 = 1/2 புள்ளி)

**நடைமுறைப் பொறுப்பு**

கடன்கொடுத்தோர் ரூபா 150 000

செலுத்த வேண்டிய மின்கட்டணம் ரூபா 6 000 (1 × 1/2 = 1/2 புள்ளி)

ix. **அபூர்வ தயாரிப்பு வணிகத்தின் 31.10.2018 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| காசு விற்பனை (1/2) | 400 000 | |
| கடன் விற்பனை | 200 000 | 600 000 |
| கழி | | |
| **செலவினங்கள்** | | |
| கடன் கொள்வனவு (1/2) | 100 000 | |
| காசுக் கொள்வனவு | 200 000 | |
| உற்பத்தி ஊழியர் கூலி | 70 000 | |
| உற்பத்திப் பொருள் கொண்டு செல்லும் கூலி | 60 000 | |
| உட்சுமைக் கூலி | 20 000 | |
| மின்சாரம் (1/2) | 6 000 | |
| உபகரணப் பெறுமானத் தேய்வு | 2 500 | (458 500) |
| தேறிய இலாபம் | (1/2) | 141 500 |

(02 புள்ளிகள்)

x.a. **உரிமையாண்மைக் கணக்கு**
- மூலதனக் கணக்கு (1/2 புள்ளி)

**வருமானக் கணக்கு**
- விற்பனைக் கணக்கு (1/2 புள்ளி) (01 புள்ளி)

b. ரூபா 647 500 (01 புள்ளி)
அல்லது

(250 000 + 100 000 + 300 000) - 2 500 = 647 500
(1/2 புள்ளி) (1/2 புள்ளி)

| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) | (viii) | (ix) | (x) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a. 01<br>b. 01 | 02 | a. 01<br>b. 01 | 02 | 02 | a. 01<br>b. 01 | 02 | a. 01<br>b. 01 | 02 | a. 01<br>b. 01 | 20/20 |

**பகுதி I - வணிகக் கல்வி**

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)**

**2.** (i) (a) மனிதத் தேவை என்றால் என்ன?
(b) மனிதத் தேவைகளின் குணாம்சங்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(a) வணிகத்தின் மூலம் வித்தியாசமான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் ஊழியர்களைக் கொண்டிருப்பது அவ்வணிகத்தின் வெளிவாரிச் சூழல் ஆகும்.
(b) பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களால் பயன்படுத்தப்படும் இயற்கை வளங்கள் மூலதனம் என அழைக்கப்படும்.
(c) தனியார் துறையில் 'இலாப நோக்கற்ற நிறுவனங்களாக' கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன.
(d) உற்பத்திப்பொருட்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வணிகங்களை பண்டங்களை உற்பத்தி செய்யும் வணிகங்கள், சேவைகளை உற்பத்தி செய்யும் வணிகங்கள் என வகைப்படுத்த முடியும். (02 புள்ளிகள்)

(iii) பரதனும் மைதிலியும் கந்தளாயில் உள்ள பாசுரன் வணிகத்திடமிருந்து பசும்பாலைக் கொள்வனவு செய்வதன் மூலம் 'பசுமையான தயிர்' எனும் பெயரில் தயிரை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்துகின்றனர்.
(a) இச்சம்பவத்தில் உள்ள 'பசுமையான தயிர்' வணிகத்தின் மூலம் திருப்தி செய்யப்படும் மனித விருப்பம் யாது?
(b) இச்சம்பவத்தில் காணப்படும் பாசுரன் வணிகத்துடன் தொடர்புப்பட்ட வகையில் 'பசுமையான தயிர்' வணிகத்தின் **இரண்டு** அனுகூலங்கள் தருக. (02 புள்ளிகள்)

(iv) இலங்கை ரூபாவிற்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பதன் காரணமாக மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதற்கான கிரயம் அதிகரிக்கின்றது.
(a) மேலே தரப்பட்ட கூற்றில் காணப்படும் வணிகச் சூழல் காரணி எது?
(b) மசகு எண்ணெய் பாவனையைக் குறைப்பதற்கு ஒரு பதிலீட்டைச் சிபாரிசு செய்க.
(02 புள்ளிகள்)
**(மொத்தம் 08 புள்ளிகள்)**

2. i.
a. மனிதன் உயிர்வாழ்வதற்கு அவசியமாக நிறைவுசெய்ய வேண்டியவை மனித தேவைகள் எனப்படும்.
(01 புள்ளி)

b. - அத்தியாவசியமானவை
- பொதுத்தன்மைக் கொண்டவை
- தோற்றுவிக்க முடியாதிருத்தல்.
- வரையறுக்கப்பட்டவை. (1/2 x 2 = 1 புள்ளி)

ii. a. பொய்
b. பொய்
c. உண்மை
d. உண்மை (1/2 x 4 = 2 புள்ளி)

iii. a. தயிர் (01 புள்ளி)
b. - கூடுதலான மூலதனத்தைத் திரட்டலாம்.
- நட்டம் இருவரிடையே பகிரப்படும்.
- பங்காளர் கூட்டாக தீர்மானம் மேற்கொள்ளலாம்.
- பங்காளர் இருவரது பல்வேறு திறமைகளையும் பயன்படுத்தலாம்
- பொறுப்புக்கள் இருவரிடையேயும் பகிரப்படும். (1/2 x 2 = 1 புள்ளி)

iv. a. பொருளாதாரச் சூழல் (01 புள்ளி)

b. - எரிவாயு பயன்படுத்தல்
- மின்சாரப் பாவனை
- சூரிய சக்திப் பயன்படுத்தல்
- மனித வலு பயன்படுத்தல்
- விலங்கு வலு பயன்படுத்தல்
- நிலக்கரியைப் பயன்படுத்தல்
- உயிர்வாயுவைப் பயன்படுத்தல் (1× 1 = 1 புள்ளி)

Q2

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| a. 01<br>b. 01 | a. 1/2<br>b. 1/2<br>c. 1/2<br>d. 1/2 | a. 01<br>b. 01 | a. 01<br>b. 01 | $\frac{8}{8}$ |

**3.** (i) (a) சில்லறை வணிகம் என்றால் என்ன?
(b) வணிக வங்கிகளில் காணப்படும் **இரண்டு** வகையான கணக்குகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா பொய்யா** எனக் குறிப்பிடுக.
(a) சில்லறை வியாபாரத்திற்கும் மொத்த வியாபாரத்திற்குமான பிரதான வேறுபாடு கொள்வனவாளரின் உள்நோக்கம் ஆகும்.
(b) சிறப்புமுறைக் குறுக்குக் கோடிடலுடன் கூடிய ஒரு காசோலையை எந்தவொரு வணிக வங்கியின் நடைமுறைக் கணக்கிலும் வைப்பிலிட முடியும்.
(c) ஆதனக் காப்புறுதிக்கான இடர் நிச்சயமானதாகக் காணப்படுகின்ற அதேவேளை ஆயுள் காப்புறுதிக்கான இடர் நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது.
(d) தொடர்பாடல் செயன்முறையில் செய்தி தொடர்பில் அனுப்புபவரது நடவடிக்கை துலங்கல் ஆகும். (02 புள்ளிகள்)

(iii) சாரங்கா பற்றிக் தயாரிப்பாளர்கள், சிங்கப்பூரில் உள்ள ஆனந்த் என்பவருக்கு ஒரு தொகை பற்றிக் வடிவமைப்புக்களை ஆகாய விமானம் மூலம் அனுப்பினர்.
(a) இங்கு குறிப்பிடப்படும் இறக்குமதியாளர் மற்றும் ஏற்றுமதியாளரைப் பெயரிடுக.
(b) இதில் உள்ளடங்கியுள்ள போக்குவரத்து முறை தொடர்பில் போக்குவரத்து மூலகங்களான வழி மற்றும் ஊடகத்துக்கு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(iv) விமலன் என்பவர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனத்தில் ரூ. 2 000 000 பெறுமதியான தனது மோட்டாரை அதே பெறுமதிக்குக் காப்புறுதி செய்திருந்தார். இவரது மோட்டார் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூ. 500 000 இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாதையில் நடந்து சென்ற சுந்தரம் என்பவருக்கும் சிறிய காயங்கள் ஏற்பட்டிருந்தன.
மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி காப்புறுதி தொடர்பில்,
(a) முதலாம் தரப்பினரைப் பெயரிடுக.
(b) இரண்டாம் தரப்பினரைப் பெயரிடுக.
(c) மூன்றாம் தரப்பினரைப் பெயரிடுக.
(d) விமலன் பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டின் பெறுமதியைக் குறிப்படுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

3. i.

a. இறுதி நுகர்விற்காக பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல் சில்லறை வணிகம் எனப்படும்.
(01 புள்ளி)

b. - நடைமுறை வைப்புக்கணக்கு
- சேமிப்பு வைப்புக் கணக்கு
- நிலையான வைப்புக் கணக்கு (1/2 x 2 = 1 புள்ளி)

ii. a. உண்மை,
b. பொய்
c. பொய்
d. பொய் (1/2 x 4 = 2 புள்ளி)

iii. a. இறக்குமதியாளர் - ஆனந்த்
ஏற்றுமதியாளர் - சாரங்க பற்றிக் உற்பத்தியாளர் (1/2 x 2 = 01 புள்ளி)

b. ஊடகம் - ஆகாய விமானம்
வழி - ஆகாய மார்க்கம் (1/2 x 2 = 01 புள்ளி)

iv. a. விமலன்

b. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

c. சுந்தரம்

d. ரூபா 500 000 (1/2 x 4 = 02 புள்ளி)

Q3

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| a. 01<br>b. 01 | a. 1/2<br>b. 1/2<br>c. 1/2<br>d. 1/2 | a. 01<br>b. 01 | a. 1/2<br>b. 1/2<br>c. 1/2<br>d. 1/2 | $\frac{8}{8}$ |

4. (i) (a) முகாமைத்துவம் என்றால் என்ன?
(b) சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா பொய்யா** எனக் குறிப்பிடுக.
(a) திட்டமிட்ட நடவடிக்கைகள் ஒழுங்குமுறையில் நடைபெற்றுள்ளதா என்பதனைப் புலனாய்வு செய்யும் செயன்முறை திட்டமிடல் எனப்படும்.
(b) வணிகம் ஒன்று மிகவும் கவர்ச்சிகரமாகவும் இலாபகரத்தன்மையுடைய வழியிலும் திருப்தி செய்யக்கூடிய வகையில் நுகர்வோரை உள்ளடக்கியுள்ள சந்தைப் பங்கு இலக்குச் சந்தை எனப்படும்.
(c) முதலீடு ஒன்றைத் தெரிவுசெய்யும்போது அம்முதலீட்டின் இடரை மட்டுமே கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.
(d) ஈட்டிய வருவாய்களில் இருந்து ஒரு தொகைப் பணத்தை, பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வினைத்திறன் கொண்ட வழிமுறையில் ஈடுபடுத்துதல் முதலீடு ஆகும். (02 புள்ளிகள்)

(iii) ரத்னா என்பவர் உயர்வான இடரை ஏற்க விருப்பமில்லாத ஒருவராவார். இவர் ஓர் ஆண்டுக்கு முன்னர் ரூ.1 200 000 பெறுமதியில் வாங்கிய ஒரு காணியை ரூ.1 500 000 ஆக விற்கிறார். இவர் இப்பணத்தை தனது மகளின் உயர் கல்விக்காக அடுத்த மாதம் பயன்படுத்த எண்ணியுள்ளார்.
(a) காணியை விற்ற நடவடிக்கையின் மூலம் ரத்னாவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுகூலத்தின் பெறுமதி என்ன?
(b) மேலே (a) இல் தரப்பட்ட அந்த அனுகூலத்திற்குப் பயன்படுத்தப்படும் சொற்பதம் என்ன?
(c) ரத்னா தனது மகளின் உயர் கல்விக்காக அப்பணத்தைப் பயன்படுத்தும் வரை அதனை முதலீடு செய்யக்கூடிய மிகவும் பொருத்தமான முதலீட்டு மூலம் யாது?
(d) மேலே (c) இல் தரப்பட்ட உமது சிபாரிசுக்கான காரணத்தைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) 31.03.2018 இல் வருடந்த பாடசாலைச் சுற்றுலாவின்போது அனுராதபுரத்திற்கும் பொலன்னறுவைக்கும் செல்ல ஒழுங்கமைப்பாளர்கள் தீர்மானித்தனர். முதலுதவி மற்றும் உபசரணைகள் தொடர்பில் செயற்குழுக்களுக்கான மாணவர்கள் நியமிக்கப்பட்டனர். சுற்றுலாவின் பின்னர் சுற்றுலா தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து அதிபர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வகுப்பாசிரியர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.
(a) மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் **இரண்டு** முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.
(b) மேலே (a) இல் குறிப்பிட்ட முகாமைத்துவக் கருமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஓர் உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

4. i.
a. வணிகத்தின் நோக்கங்களை வினைத்திறனாகவும் விளைதிறன் கொண்டதாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்காக வணிகத்திடம் காணப்படும் அனைத்து வளங்களையும் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி கொள்ளும் ஒரு செயன்முறையே முகாமைத்துவம் ஆகும். (01 புள்ளி)

b. - பங்குலாபத்தைப் பெறல்
- மூலதன இலாபத்தைப் பெறல்
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பங்குகளை விற்பனை செய்து பணத்தினை பெறலாம்.
- கடன் பெறும் போது பிணைப்பத்திரமாக முன்வைக்கலாம்.
- வாக்களிக்கும் உரிமை
- இயக்குனர் சபையில் அங்கம் வகித்தல்.
- கம்பனியில் உரிமையைப் பெறல். $(1/2 \times 2 = 1$ புள்ளி)

ii. a. பொய்
b. உண்மை
c. பொய்
d. உண்மை (1/2 x 4 = 2 புள்ளி)

iii. a. ரூபா 300 000
b. மூலதன இலாபம்
c. சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்தல் / ஒரு மாத நிலையான வைப்புக்கணக்கிடல்
d. - ஒரு மாதத்தினுள் பணத்தை மீளப் பெறவேண்டிய தேவைப்பாடு உள்ளதால்
- ரத்னா உயர் இடரை ஏற்க விரும்பாமை. (1/2 x 4 = 2 புள்ளி)

iv.

| a | b |
|---|---|
| 1. திட்டமிடல் | - அனுராதபுரம், பொலன்னறுவைக்குச் சுற்றுலா செல்லத் தீர்மானித்தல். |
| 2. ஒழுங்கமைத்தல் | - முதலுதவி மற்றும் உபசரணை தொடர்பில் செயற்குழுக்கான மாணவர்களை நியமித்தல். |
| 3. கட்டுப்படுத்தல் | - அதிபர் சுற்றுலாத் தொடர்பான முன்னேற்றங்கள் பற்றிய அறிக்கையைக் கேட்டல்<br>- வகுப்பாசிரியர் அறிக்கை சமர்ப்பித்தல் |

(1/2 x 2 = 1 புள்ளி) (1/2 x 2 = 1 புள்ளி)

Q4

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| a. 01<br>b. 01 | a. 1/2<br>b. 1/2<br>c. 1/2<br>d. 1/2 | a. 1/2<br>b. 1/2<br>c. 1/2<br>d. 1/2 | a. 01<br>b. 01 | $\frac{8}{8}$ |

## பகுதி II - கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

5. (i) (a) சொத்து என்றால் என்ன?
(b) உரிமையாண்மைக் கணக்குகள் தொடர்பில் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எழுதுக.
(02 புள்ளிகள்)

(ii) பின்வருவன தளபாடக் கடையொன்றில் நிகழ்ந்த இரண்டு கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.
(a) முகாமையாளரின் பாவனைக்காக ரூ. 20 000 பெறுமதியான நிறைவேற்றுத் தரக் கதிரை ஒன்று கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.
(b) கரீமா என்பவருக்கு கடனடிப்படையில் ரூ. 15 000 இற்கு மேசை ஒன்று விற்பனை செய்யப்பட்டது.
மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுடனும் தொடர்புடைய மூல ஆவணங்கள் மற்றும் மூலப் பதிவேடுகளை எழுதுக.
(02 புள்ளிகள்)

(iii) பின்வருவன மின்சார உபகரணங்களை விற்பனை செய்யும் சாஹிரா வணிகத்தின் 31.01.2018 இல் முடிவடைந்த மாதத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்களாகும்.
1. பெற்றுக்கொண்ட வங்கிக் கடன் ரூ. 100 000
2. கடனிற்குக் கொள்வனவு செய்யப்பட்ட மின்சார உபகரணங்கள் ரூ. 50 000
3. கடன்கொடுத்தோருக்குக் கொடுத்த காசு ரூ. 8 000
4. ரூ. 25 000 பெறுமதியான மின்சார உபகரணங்கள் ரூ. 40 000 ஆக விற்பனை செய்யப்பட்டன.
5. சாஹிராவினால் தனது சொந்தப் பாவனைக்காக எடுத்த காசு ரூ. 5 000

**வேண்டப்படுவது:**
(a) மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதைக் குறிப்பிடுக. (விடையளிப்பதற்கு பின்வருவது போன்ற மாதிரியைப் பயன்படுத்துக. உமக்காக முதலாவது கொடுக்கல்வாங்கல் செய்து காட்டப்பட்டுள்ளது.)

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள்(ரு) | | | = உரிமையாண்மை (ரு) + பொறுப்புக்கள் (ரு) | | |
|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் பொருத்திகள் | சரக்கிருப்பு | காசு | உரிமையாண்மை | வங்கிக் கடன் | கடன் கொடுத்தோர் |
| 01.01.2018 இல் மீதி | 160 000 | 70 000 | 25 000 | 235 000 | – | 20 000 |
| 1 | – | | + 100 000 | | + 100 000 | – |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

(b) 31.01.2018 இல் இருந்தவாறு சாஹிரா வணிகத்தின் பின்வரும் உருப்படிகளின் பெறுமதி எவ்வளவு?
1. நடைமுறைச் சொத்துக்கள்
2. நடைமுறையல்லாச் சொத்துக்கள்
3. நடைமுறைப் பொறுப்புக்கள்
4. நடைமுறைல்லாப் பொறுப்புக்கள்
(04 புள்ளிகள்)

(iv) பின்வருவன ஜிலேசன் ஜெயன் சில்லறை வணிகத்தில் 2018 மே மாதத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்களாகும்.

(1) 03.05.2018 – சமீரா என்பவரிடமிருந்து ஒவ்வொன்றும் ரூ. 200 ஆன 20 தேயிலைப் பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் (பட்டியல் இல.612) வியாபாரக் கழிவு 5% வழங்கப்பட்டது.

(2) 05.05.2018 – ஒவ்வொன்றும் ரூ.15 ஆன 20 முட்டைகள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. (பற்றுச் சீட்டு இல.25)

(3) 18.05.2018 – ஒவ்வொன்றும் ரூ.5 ஆன 100 தீப்பெட்டிகள் பாலனிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. (பட்டியல் இல.305)

(4) 23.05.2018 – ரெக்னோ வியாபாரிகளிடமிருந்து கடனடிப்படையில் ரூ. 25 000 பெறுமதியான கணினி மேசை ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:**

(a) ஜிலேசன் ஜெயன் வணிகத்தின் 2018 மே மாதத்திற்கான கொள்வனவு நாளேட்டைத் தயாரிக்குக.

(b) 31.05.2018 இல் இருந்தவாறு பேரேட்டுக் கணக்குகளுக்குக் கொள்வனவு நாளேட்டின் தகவல்களைப் பதிவு செய்க.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

i.

a. கடந்தகாலக் கொடுக்கல் வாங்கல் கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வொன்றின் விளைவாக எதிர்காலத்தில் வணிகத்திற்கு பொருளாதார நலன்களின் உட்பாய்ச்சலை ஏற்படுத்துவதும் வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதுமான வளங்களே சொத்துக்கள் எனப்படும். (01 புள்ளி)

b. - உரிமை குறைதல் வரவு
உரிமை அதிகரித்தல் செலவு (01 புள்ளி)

ii.

| மூல ஆவணம் | மூலப்பதிவேடு |
|---|---|
| a. பொதுநாட்குறிப்பு கைச்சாத்து | - பொதுநாட்குறிப்பு |
| b. விற்பனைப் பட்டியல் | - விற்பனை நாட்குறிப்பேடு |

(1/2 x 4 = 2 புள்ளி)

iii. a.

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள்(ரூ) | | | = உரிமையாண்மை (ரூ) + பொறுப்புக்கள் (ரூ) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் பொருத்திகள் | சரக்கிருப்பு | காசு | உரிமையாண்மை | வங்கிக் கடன் | கடன் கொடுத்தோர் | |
| 01.01.2018 இல் மீதி | 160 000 | 70 000 | 25 000 | 235 000 | – | 20 000 | |
| 1 | – | - | + 100 000 | | + 100 000 | – | |
| 2 | | + 50 000 | | | | + 50 000 | (1/2) |
| 3 | | | - 8 000 | | | - 8 000 | (1/2) |
| 4 | | - 25 000 | + 40 000 | + 15 000 | | | (1/2) |
| 5 | | | - 5 000 | - 5 000 | | | (1/2) |

(1/2 x 4 = 2 புள்ளி)

b. 1. நடைமுறைச்சொத்துக்கள் ரூபா 247 000
2. நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 160 000
3. நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 62 000
4. நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் ரூபா 100 000 (1/2 × 4 = 2 புள்ளிகள்)

iv.

**கொள்வனவு நாட்குறிப்பேடு**

| திகதி | பட். இல | வழங்குநர் | பெறுமதி | பே.ப | |
|---|---|---|---|---|---|
| | | | | | (1/2) |
| 3.5.18 | 612 | சமீரா | 3 800 | | (1/2) |
| 18.5.18 | 305 | பாலன் | 500 | | (1/2) |
| 31/05 | | கொள்வனவுக் கணக்கிற்கு மாற்றியது | 4 300 | | (1/2) |

(2 புள்ளிகள்)

**கொள்வனவுக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| 31/05 | கடன் கொடுத்தோர் கணக்கு | | 4 300 (1/2) | | | | |

**சமீரா கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | ரூபா | திகதி | விபரம் | பே.ப | ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3/5 | கொள்வனவு கணக்கு | | 3 800 (1/2) |

**பாலன் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | ரூபா | திகதி | விபரம் | பே.ப | ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 18/5 | கொள்வனவு கணக்கு | | 5 00 (1/2) |

3 அமைப்பும் சரியாயின் = 1 / 2 புள்ளி (02 புள்ளிகள்)

| Q5 | (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|---|
| | a. 01<br>b. 01 | a. 01<br>b. 01 | a. 02<br>b. 02 | a. 02<br>b. 02 | 12/12 |

**6.** (i) (a) வங்கிக்கூற்று என்றால் என்ன?

(b) வணிகமொன்றின் வங்கிக் கணக்கு மீதிக்கும் வங்கிக் கூற்றில் காணப்படும் மீதிக்கும் இடையே வித்தியாசம் காணப்படுவதற்கான **இரண்டு** காரணங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வருவன அலுமாரிகளைத் தயாரிக்கும் சண்முகம் வணிகத்தின் 2018 நவம்பர் மாதத்திற்கான சில தகவல்கள் ஆகும்.

| | |
|---|---|
| ✳ மரம் தொடர்பான கிரயம் | ரூ. 100 000 |
| ✳ மாதாந்த மின்சாரக் கட்டணம் | ரூ. 2 500 |
| ✳ தச்சுவேலை செய்பவரின் கூலிகள் | ரூ. 60 000 |
| ✳ ஏனைய நேர் செலவுகள் | ரூ.17 500 |
| ✳ தச்சு வேலைக் கடைக்கான வாடகை | ரூ. 20 000 |

நவம்பர் மாதத்தில் 05 அலுமாரிகள் தயாரிக்கப்பட்டன. அலுமாரி ஒன்றின் விற்பனை விலை ரூ. 50 000 ஆகும்.

**வேண்டப்படுவது :**

(a) 2018 நவம்பர் மாதத்திற்கான மூலக் கிரயம்

(b) அலுமாரி ஒன்றின் விற்பனை மூலமான இலாபம் (02 புள்ளிகள்)

(iii) (a) பின்வருவன வணிகமொன்றில் நிகழ்ந்த கணக்கீட்டுத் தவறுகளைத் திருத்துவதில் பேணப்பட்ட **இரண்டு** பூரணமற்ற நாட்குறிப்புப் பதிவுகள் ஆகும்.

**பொது நாட்குறிப்பேடு**

| | திகதி | உறுதிச்சீட்டு இல | விபரம் | பே.ப | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| ① | 2018.03.31 | 101 | கொள்வனவுக் கணக்கு வரவு<br>கடன்கொடுத்தோர் கணக்கு<br>(.................................) | | 40 000 | 40 000 |
| ② | | 102 | அலுவலக உபகரணங்கள் கணக்கு வரவு<br>கொள்வனவுக் கணக்கு<br>(.................................) | | 20 000 | 20 000 |

**வேண்டப்படுவது :**

தவறுகளைத் திருத்துவது தொடர்பில் மேலே தரப்பட்ட ஒவ்வொன்றுக்கும் விளம்பல்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(b) 31.03.2018 இல் இருந்தவாறு சுந்தரி வணிகத்தின் பரீட்சை மீதியைத் தயாரித்தபோது அது இணங்காததால் வித்தியாசமானது தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது.
கணக்கீட்டு தவறுகளைத் திருத்தியதன் பின்னர் சுந்தரி வணிகத்தில் தயாரிக்கப்பட்ட தொங்கல் கணக்கு பின்வருமாறு:

**தொங்கல் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | தொகை (ரூ.) | திகதி | விபரம் | பே.ப | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | பரீட்சை மீதி வித்தியாசம் | | ......... | | உபகரணக் கணக்கு | | 12 000 |
| | விற்பனைகள் கணக்கு | | 5 000 | | மின்சாரக் கட்டணக் கணக்கு | | 4 000 |
| | கொள்வனவுகள் கணக்கு | | 2 000 | | | | |

**வேண்டப்படுவது :**

(a) தவறுகளைத் திருத்துவதற்கு முன்னர் பரீட்சை மீதியில் காணப்பட்ட வித்தியாசம்

(b) தொங்கல் கணக்கிற்கு வித்தியாசத்தைப் பதிவதற்கு முன்னர் 31.03.2018 இல் இருந்தவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியின் வரவு நிரலின் கூட்டுத்தொகை ரூ. 85 000 எனின் பரீட்சை மீதியின் செலவு நிரலின் கூட்டுத்தொகை (02 புள்ளிகள்)

(iv) 31.10.2018 இல் இருந்தவாறு சபாபதி வணிகத்தின் வங்கிக் கணக்கு வரவு மீதி ரூ. 16 000 ஆகும். ஆனால் அத்தினத்தில் பெறப்பட்ட வங்கி கூற்றின் மீதியானது வங்கி கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் பின்வருவன வித்தியாசத்திற்கான காரணங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

1. மாதத்தில் வைப்பிலிடப்பட்டபோதும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 5 000
2. வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத வங்கிக் கட்டணங்கள் ரூ. 500
3. மாதத்தில் வழங்கப்பட்ட போதும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ. 8 000
4. வங்கியால் கடன்பட்டோரிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்ட தொகை ரூ. 2 000 வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

(a) 31.10.2018 இல் இருந்தவாறு வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குதல்

(b) 31.10.2018 இல் இருந்தவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

6.

i.

a. வணிக வங்கியில் நடைமுறைக் கணக்கிற்கு உரித்துடைய ஒருவருக்கு வங்கியினால் அவருடைய கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரங்களை உள்ளடக்கி மாதத்திற்கு ஒரு முறை அனுப்பப்படும் அறிக்கையாகும்.

(01 புள்ளி)

b. - மாற்றப்படாத காசோலைகள்
- தீர்வையாகாத காசோலைகள்
- நேரடி வைப்புக்கள்
- நிலையியற் கட்டளையின் பேரிலான கொடுப்பனவுகள்
- வங்கிக் கட்டணமும் காசோலைப் புத்தகக் கட்டணமும்

(1/2 x 2 = 1 புள்ளி)

ii.

a. - ரூபா 177 500 (01 புள்ளி)

**அல்லது**

| | | | |
|---|---|---|---|
| மரம் தொடர்பான கிரயம் | - | ரூபா | 100 000 |
| தச்சு வேலை செய்பவரின் கூலி | - | ரூபா | 60 000 |
| ஏனைய நேர்ச்செலவு | - | ரூபா | 17 500 |
| | | | 177 500 |

} (1/2)

b. ரூபா 10 000 (01 புள்ளி)

**அல்லது**

| | | | |
|---|---|---|---|
| மூலக்கிரயம் | - | ரூபா | 177 500 |
| மின்சாரம் | - | ரூபா | 2 500 |
| வாடகை | - | ரூபா | 20 000 |
| | | | 200 000 |

**அல்லது**

ஒரு அலுமாரிக்கான கிரயம் $\frac{200000}{5}$ (1/2)

= 40000

அலுமாரி ஒன்றின் விற்பனை விலை = 50 000

இலாபம் = 50 000 - 40 000 = 10 000 (1/2)

iii. a.1. - ரூபா 40 000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியல் ஏடுகளில் பதியப்படாமை திருத்தப்பட்டது.

- கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 40 000 குறைவாகப் பதிந்தமை திருத்தப்பட்டது.
- ரூபா 44 000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியலொன்று கொள்வனவு நாளேட்டின் ரூபா 4 000 என பதியப்பட்டது திருத்தப்பட்டது.

2. - ரூபா 20 000 பெறுமதியான அலுவலக உபகரணம் கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது திருத்தப்பட்டது. (1 x 2 = 2 புள்ளி)

I

தொங்கல் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை (ரு.) | திகதி | விபரம் | பே.ப | தொகை (ரு.) |
|---|---|---|---|---|---|---|---|
| | பரீட்சை மீதி வித்தியாசம் | | 9 000 | | உபகரணக் கணக்கு | | 12 000 |
| | விற்பனைகள் கணக்கு | | 5 000 | | மின்சாரக் கட்டணக் கணக்கு | | 4 000 |
| | கொள்வனவுகள் கணக்கு | | 2 000 | | | | |

2. 85 000 + 9 000 = 94 000 (01 புள்ளி)

வணிகத்தின் செம்மையாக்கிய வங்கிக்கணக்கு

iv. a.

| விபரம் | ரூபா | விபரம் | ரூபா |
|---|---|---|---|
| 2018.10.31 மீதி / வ | 16 000 | வங்கிக் கட்டணம் | 5 00 (1/2) |
| நேரடி வைப்பு (1/2) | 2 000 | 2018.10.31 மீதி / செ | 17 500 (1/2) |
| | 18 000 | | 18 000 |
| மீ.கீ.கொ.வ | 17 500 | | |

(1/2 x 3 = 1 1/2 புள்ளி)

b.

**வணிகத்தின் 2018 ஒக்டோபர் மாத வங்கி இணக்கக் கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா | |
|---|---|---|---|
| திருத்திய வங்கி கணக்கு மீதி | | 17 500 | (1/2) |
| கூட்டு - சமர்ப்பிக்கப்படாத காசோலை | 8 000 | 8 000 | (1/2) |
| | | 25 500 | |
| கழி - வசூலிக்கபடாத காசோலை | 5 000 (1/2) | (5 000) | |
| வங்கிக்கூற்றின்படி வங்கி மீதி (1/2) | | 20 500 | (1/2) |

(1/2 x 5 = 2 1/2 புள்ளி)

Q6

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| a. 01<br>b. 01 | a. 01<br>b. 01 | a. 02<br>b. 02 | a. 1 1/2<br>b. 2 1/2 | 12/12 |

7. (i) (a) தனியுடைமை வணிகத்தினால் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் எவை?
(b) பெற வேண்டிய வருமானங்களைப் பதிவதற்கான இரட்டைப் பதிவை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) லக்கி விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 60 ஆகும். ஒரு அங்கத்துவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ.1 000 ஆகும். பின்வருவன 31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்காக கழகத்தின் பொருளாளரால் தயாரிக்கப்பட்ட பூரணமற்ற பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கும் வருமானக் கூற்றும் ஆகும்.

**பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு - லக்கி விளையாட்டுக் கழகம்**
**31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | | | |
|---|---|---|---|
| அங்கத்துவக் கட்டணம் | A | காகிதாதிகள் | 5 000 |
| கொடி விற்பனை மூலம் பெற்றவை | 8 000 | போக்குவரத்துச் செலவுகள் | 8 500 |
| | | விழாச் செலவுகள் | 12 500 |

**வருமானக் கூற்று**
**லக்கி விளையாட்டுக் கழகம்**
**31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | |
|---|---|
| <u>வருமானம்</u> | |
| அங்கத்துவக் கட்டணம் | 60 000 |
| கொடி விற்பனை மூலம் பெற்றவை | B |
| <u>செலவுகள்</u> | |
| போக்குவரத்துச் செலவுகள் | C |
| விழாச் செலவுகள் | 12 500 |
| காகிதாதிகள் | 5 000 |

**மேலதிக தகவல்கள்**

* 8 அங்கத்தவர்கள் ஆண்டுக்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை.
* 31.03.2018 இல் இருந்தவாறு சென்மதியாகக் காணப்படும் போக்குவரத்துச் செலவுகள் ரூ. 2 000 ஆகும்.
* கொடிகள் விற்பனையில் இருந்து பெறவேண்டிய தொகை ரூ. 600 ஆகும்.

**வேண்டப்படுவது :**

(a) மேலே தரப்பட்ட A,B,C ஆகியவற்றுக்கான சரியான தொகைகள்
(b) 31.03.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மிகை அல்லது பற்றாக்குறை (02 புள்ளிகள்)

(iii) பின்வருவன 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஜனந்தன் வணிகத்தின் பரீட்சை மீதி ஆகும்.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| காணி கட்டடங்கள் (கிரயத்தில்) .................... | 300 000 | |
| மூலதனம் .................... | | 500 000 |
| விநியோக வாகனங்கள் (கிரயம்) .................... | 400 000 | |
| 01.01.2017 இல் விநியோக வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு.................... | | 60 000 |
| சரக்கிருப்பு (01.01.2017 இல்) .................... | 25 000 | |
| வங்கிக் கடன் 9% .................... | | 100 000 |
| கொள்வனவுகள் .................... | 150 000 | |
| விற்பனைகள் .................... | | 240 000 |
| சம்பளங்கள் .................... | 8 000 | |
| கடன்பட்டோர் .................... | 20 000 | |
| கடன்கொடுத்தோர் .................... | | 17 000 |

| | | |
|---|---|---|
| பெற்ற கழிவுகள் | | 3 000 |
| கொடுத்த கழிவுகள் | 1 000 | |
| உட்சுமைக் கூலி | 1 500 | |
| செலுத்திய வங்கி வட்டி | 4 500 | |
| அறவிடமுடியாக் கடன் | 800 | |
| மின்சாரக் கட்டணங்கள் | 2 000 | |
| இறைவரிக் கட்டணம் | 200 | |
| காசு மீதி | 7 000 | |
| | 920 000 | 920 000 |

**மேலதிக தகவல்கள் :**

- ⁎ 31.12.2017 இல் இருந்தவாறு சரக்கிருப்பு ரூ. 25 000 ஆகும்.
- ⁎ விநியோக வாகனங்களுக்கு வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- ⁎ ரூ. 1 200 ஐ அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது :**

(a) 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)

(b) 31.12.2017 இல் இருந்தவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

7.

i.

a. – வருமானக்கூற்று / இலாப நட்டக்கூற்று / வியாபார இலாப நட்டக்கூற்று / நிதிநிலமைக் கூற்று

(1/2 × 2 = 1 புள்ளி)

b. பெறவேண்டிய வருமானக் கணக்கு வரவு

உரிய வருமானக் கணக்கு செலவு (01 புள்ளி)

ii. a. A. ரூபா 52 000

B. ரூபா 8 600

C. ரூபா 10 500 (1/2 × 3 = 1 1/2 புள்ளிகள்)

b. ரூபா 40 600 (1/2 புள்ளி)

**அல்லது**

**லக்கி விளையாட்டுக் கழகத்தின் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| அங்கத்துவக் கட்டணம் | 60 000 | |
| கொடி விற்பனை வருமானம் | 8 600 | 68 600 |
| **செலவீனங்கள்** | | |
| போக்குவரத்துச் செலவு | 10 500 | |
| விழாச் செலவுகள் | 12 500 | |
| காகிதாதிகள் | 5 000 | (28 000) |
| வருமான மிகை | (1/2) | 40 600 |

**ஜனாந்தன் வணிகத்தின்**

iii. **31.12.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று** (1/2)

| விபரம் | தொகை ரூபா | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|---|
| **விற்பனை** | | | 240 000 |
| <u>கழி விற்பனைக்கிரயம்</u> | | | |
| 2017.01.01 இல் சரக்கிருப்பு | | 25,000 | |
| கூட்டு கொள்வனவுகள் | 150 000 | | |
| உட்சுமைக்கூலி | 1 500 | 151 500 | |
| **விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி** | | 176 500 | |
| கழி 2017.12.31 இல் சரக்கிருப்பு | (1/2) | (25,000) | (151,500) (1/2) |
| மொத்த இலாபம் | | | 88,500 (1/2) |
| கூட்டு பெற்ற கழிவு | | | 3,000 |
| | | | 91 500 |
| **விநியோகச் செலவு** | | | |
| விநியோக வாகனத் பெறுமானத் தேய்வு | 40 000 | (1/2) | |
| அறவிடமுடியாக் கடன் | 2,000 | (1/2) | |
| கொடுத்த கழிவு | 1, 000 | 43, 000 | |
| **நிர்வாகச் செலவுகள்** | | | |
| மின்சாரக் கட்டணம் | 2,000 | | |
| சம்பளம் | 8 000 | | |
| இறைவரிக் கட்டணம் | 200 | 10, 200 | |
| **நிதிச் செலவு** | | | |
| வங்கிக் கடன் வட்டி | | 9,000 (1/2) | (62, 200) |
| தேறிய இலாபம் மூலதனக் கணக்கிற்கு மாற்றியது (1/2) | | | 29, 300 |

(1/2 x 8 = 4 புள்ளிகள்)

**ஜனாந்தன் வணிகத்தின்**
**31.12.2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று** (1/2)

| விபரம் | கிரயம் | தி.பெ.தே | தே. பெறுமதி |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லா சொத்து** | | | |
| காணி கட்டிடம் | 300,000 | - (1/2) | 300,000 |
| விநியோக வாகனம் | 400,000 | 100,000 | 300,000 |
| | 700,000 | 100, 000 | 600,000 (1/2) |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு (2017. 12. 31) | | 25, 000 (1/2) | |
| கடன்பட்டோர் | | 18, 800 (1/2) | |
| காசு மீதி | | 7,000 | 50, 800 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 650, 800 |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் | | 500,000 | |
| கூட்டு: தேறிய நட்டம் | (1/2) | 29 300 | 529, 300 |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | |
| 9% வங்கிக் கடன் | | | 100,000 |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | |
| கடன்கொடுத்தோர் | | 17,000 | |
| செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி | | 4,500 (1/2) | 21 500 |
| மொத்த உரிமையாண்மையும் பொறுப்பும் | | | 650,800 |

(1/2 header columns)

(1/2 x 8 = 4 புள்ளிகள்)

Q7

| (i) | (ii) | (iii) | | |
|---|---|---|---|---|
| a. 01<br>b. 01 | a. 01<br>b. 01 | a. 04<br>b. 04 | | 12/12 |

**ஜனாந்தன் வணிகத்தின்** (1/2)

**31.12.2017 இல்முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா | விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| 2017.01.01 இல் சரக்கிருப்பு | | 25,000 | விற்பனை | | 240,000 |
| கொள்வனவு | 150,000 | | | | |
| கூட்டு உட்சுமைகூலி | 1500 | 151,500 | | | |
| விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி | | 176,500 | | | |
| கழி 17.12.31 சரக்கிருப்பு | | (25,000) (1/2) | | | |
| விற்பனைக்கிரயம் | | 151,500 (1/2) | | | |
| மொத்த இலாபம் | | 88,500 (1/2) | | | |
| | | 240,000 | | | 240,000 |
| | | | மொத்த இலாபம் | | 88,500 |
| வீநியோகச் செலவு | | | பெற்ற கழிவு | | 3,000 |
| விநியோக வா. பெ.தே. | 40,000 (1/2) | | | | |
| அறவிடமுடியாக்கடன் | 2,000 (1/2) | | | | |
| கொடுத்த கழிவு | 1,000 | 43,000 | | | |
| நிர்வாகச் செலவு | | | | | |
| சம்பளம் | 8,000 | | | | |
| இறைவரிக் கட்டணம் | 200 | | | | |
| மின்சாரக் கட்டணம் | 2,000 | 10,200 | | | |
| நிதிச்செலவு | | | | | |
| வங்கிக் கடன் வட்டி | | 9,000 (1/2) | | | |
| | | 62 200 | | | |
| தேறிய இலாபம் மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டது (1/2) | | 29 300 | | | |
| | | 91500 | | | 91, 500 |

(1/2 x 8 = 4 புள்ளிகள்)

**ஜனனி வணிகத்தின்** (1/2)

**31.12.2017 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று** (1/2)

| விபரம் | ரூபா | ரூபா | விபரம் | கொ.வி | தி.பெ | இறுதி பெறு |
|---|---|---|---|---|---|---|
| **உரிமையாண்மை** | | | | | | |
| மூலதனம் | | 500,000 | | 300,000 | - (1/2) | 300,000 |
| கூட்டு: தேறிய இலாபம் | (1/2) | 29,300 | | 400,000 | (100 000) | 300,000 |
| | | 529,300 | | 700,000 | 100,000 | 600,000 (1/2) |
| நடை. மு. அல்லா பொறு | | | | | | |
| 9% வங்கிக்கடன் | | 100,000 | | | | |
| | | | | | 25,000 (1/2) | |
| | | | | | 18, 800 (1/2) | |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | | | 7,000 | 50, 800 |
| கடன்கொடுத்தோர் | 17,000 | | | | | |
| அட்டுறு கடன் வட்டி | 4,500 (1/2) | 21,500 | | | | |
| | | 650, 800 | | | | 650,800 |

(1/2 x 8 = 4 புள்ளிகள்)